**பிப்ரவரி – 04**

# TNPSC துளிகள்

- நாட்டிலேயே முதல் முறையாக, ஆந்திரப் பிரதேச மாநில அரசானது, சுமார் 161 வகையான குடிமைச் சேவைகளை வழங்கக் கூடிய 'மன மித்ரா' என்ற பெயரில் அமைந்த வாட்ஸ்அப் ஆளுகை விவகாரங்கள் சார்ந்த ஒரு வசதியினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- மத்திய அரசானது, மேற்கு காசி மலைக் குன்றுகள் மற்றும் கிழக்கு ஜெயின்சியா ஹில்ஸ் மாவட்டங்கள் ஆகிய மேகாலயா மாநிலத்தின் இரண்டு மாவட்டங்களில் அறிவியல் பூர்வமான நிலக்கரிச் சுரங்கத்தைத் தொடங்குவதற்காக என்று மூன்று உள்ளூர் சுரங்கத் தொழில் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு உள்ளது.
- இரயில்வே அமைச்சகம் ஆனது, பயணச் சீட்டு முன்பதிவு, இரயில்களில் உணவு வாங்குவதற்கானச் சேவைகள் மற்றும் PNR விசாரணைகள் போன்றப் பொதுச் சேவைகளை வழங்குவதற்கான ஒற்றைத் தீர்வு மையமாக SwaRail என்ற புதிய செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் அல்லூரி சீதாராம ராஜு என்ற மாவட்டத்தின் அரக்குப் பள்ளத்தாக்குப் பகுதியில் மூன்று நாட்கள் அளவிலான 'சாலி' எனப்படும் அரக்கு உத்சவ் நடைபெற்றது.
- உத்தரகாண்ட் மாநிலத்தின் டேராடூன் என்ற நகரில் நடைபெறும் 38வது தேசிய விளையாட்டுப் போட்டிகளைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- ஒடிசா வாரியர்ஸ் அணியானது ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்ற முதல் மகளிர் ஹாக்கி அணியாக மாறியுள்ளது.
- சில நீர்வழிகளுக்கு அருகில் வாழும் மக்களை அதிகளவில் பாதித்த ஆற்றுக்குருடு நோயினை முற்றிலுமாக ஒழித்த முதல் ஆப்பிரிக்க நாடாக நைஜர் மாறியுள்ளது.
- முதலாவது ரைசினா மத்தியக் கிழக்கு மாநாடு ஆனது ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் நடைபெற்றது.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபரானவர் 2025 ஆம் ஆண்டினைச் சமூக ஆண்டாக அறிவித்து, சமூகம் முழுவதும் ஒற்றுமையையும் உள்ளடக்கத்தையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு தேசிய முன்னெடுப்பினைத் தொடங்கி வைத்தார்.
- தடகளத்தில் (1956) ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற அதிக வயதான அமெரிக்க நீளம் தாண்டுதல் வீரர் கிரெக் பெல் சமீபத்தில் காலமானார்.


# தமிழ்நாடு செய்திகள்

## கூடலூர் ஜன்மம் நிலங்கள் சிக்கல்

- நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூரில் ஜன்மம் நிலங்களில் அடிப்படைக் கேளிக்கை வசதிகளை உருவாக்குவதைத் தடுக்கும் தற்காலிகத் தடையை நீக்குவதற்காக உச்ச நீதிமன்றத்தினை அணுக தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
- தமிழ்நாடு கூடலூர் ஜன்மம் நிலப்பரப்பு (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரி நிலங்களாக மாற்றுதல்) சட்டம், 1969 தொடர்பான சில வழக்குகளை நிலுவையில் உள்ள பிற


வழக்குகளிலிருந்து அவற்றைப் பிரித்துத் தனித்தனியாக விசாரிக்க அனுமதிக்குமாறு உச்ச நீதிமன்றத்தை அரசு கோர உள்ளது.

- தற்போது நிலங்களின் குத்தகை காலம் முடிவடைந்ததால், அரசாங்கம் ஆனது 34,986 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட ஜன்மம் நிலங்களை மீட்கத் தொடங்கியது.




# தேசியச் செய்திகள்

## இரயில்வே துறையின் நிதிநிலை அறிக்கை 2025





- 2025-26 ஆம் நிதியாண்டிற்கான இந்திய இரயில்வே துறையின் நிதிநிலை ஒதுக்கீடு கடந்த ஆண்டு ஒதுக்கீட்டைப் போலவே 2.65 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது.
- இதில் அரசு தனியார் கூட்டு முதலீடுகள் உட்பட மொத்தம் 2.65 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் இரயில்வே மூலதனம் ஆனது 2.52 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது.
- இந்திய இரயில்வே நிர்வாகத்தில் வாடிக்கையாளர் வசதிகளை மேம்படுத்துவதற்கான

ஒதுக்கீடு ஆனது 2025-26 ஆம் நிதியாண்டில் 12,118.39 கோடியாக தொடர்ந்து குறைந்து வருகிறது.

- மேலும், 2024-25 ஆம் நிதியாண்டில் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் சுமார் 27,570.77 கோடி ரூபாயாக இருந்த பொதுத்துறை அலகுகள் (PSU) மற்றும் கூட்டுத் துணிகர முதலீடுகள் (JV) ஆகியவற்றில் முதலீட்டிற்கான ஒதுக்கீடு ஆனது 2025-26 ஆம் நிதியாண்டில் 22,444.33 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள், இந்திய இரயில்வே நிர்வாகமானது சுமார் 1.6 பில்லியன் டன் சரக்கு இரயில் திறனை மேம்படுத்தும் ஒரு முக்கியமான மைல்கல்லை எட்டும்.
- இதன் மூலம், 3.7 பில்லியன் டன் கொள்ளளவு கொண்ட சீனாவிற்கு அடுத்தபடியாக, உலகிலேயே அதிகளவு சரக்கு இரயில் கொள்ளளவு திறனைக் கொண்ட இரண்டாவது இரயில்வே நிர்வாகமாக இது மாறும்.
- 2025-26 ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை ஒதுக்கீட்டில் 'ஒரு அதிவேக விரைவு' இரயில் திட்டத்திற்கான ஒதுக்கீடு 19,000 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- 2025-26 ஆம் நிதியாண்டில் இரயில்வே நிர்வாகமானது அதன் வலையமைப்பினை 100% மின்மயமாக்கும் இலக்கை அடைய உள்ளது.
- 2025-26 ஆம் நிதியாண்டில் இரயில்வே நிர்வாகமானது பயணிகள் வருவாயில் முதல் முறையாக 3 லட்சம் கோடி ரூபாயை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இரயில்வே நிதிநிலை அறிக்கையானது முதன்முதலில் 1924 ஆம் ஆண்டில் பொது நிதி நிலை அறிக்கையிலிருந்துப் பிரிக்கப்பட்டது.
- 92 ஆண்டுகளுக்குப் பிறகு, அப்போதைய நிதியமைச்சர் அருண் ஜெட்லி அவர்கள் 2017-18 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த மத்திய நிதிநிலையைத் தாக்கல் செய்தபோது இந்த நடைமுறை முடிவுக்கு வந்தது.
- இந்த இரண்டு நிதிநிலை அறிக்கைகளையும் இணைக்கும் முடிவு விவேக் தேவ்ராய் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்திய ரிசர்வ் வங்கியின் 5 பில்லியன் டாலர் ரூபாய் மதிப்புமாற்று ஏலம்




- இந்த மதிப்புமாற்று ஏலம் ஆனது, வங்கி அமைப்பில் சுமார் 1.50 லட்சம் கோடி ரூபாய் அளவில் ரூபாய் மதிப்பிலானப் பணப்புழக்கத்தினை உட்செலுத்துவதற்கான மத்திய

வங்கியின் சமீபத்திய நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகும்.

- இந்திய ரிசர்வ் வங்கியானது அறிவிக்கப்பட்ட 5 பில்லியன் டாலர் தொகைக்கு எதிராக, ஏலத்தில் 253 பங்கேற்பாளர்களிடமிருந்து சுமார் 25.59 பில்லியன் டாலர் மதிப்பில் ஏல கோரிக்கைகளைப் பெற்றது.
- இதில் ஏலத்தினைக் கைப்பற்றிய ஏலதாரர்களின் நடப்புக் கணக்குகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி ரூபாய் மதிப்பிலான நிதியை வரவு வைக்கும்.
- இப்பரிமாற்றப் பரிவர்த்தனையின் மறுபகுதியில், அமெரிக்க டாலர்களைத் திரும்பப் பெறுவதற்காக வேண்டி ஆறு மாதங்களுக்குப் பிறகு ரூபாய் மதிப்பிலான நிதிகள் மதிப்பு மாற்றத் தவணைகளுடன் இந்திய ரிசர்வ் வங்கிக்குத் திருப்பி அனுப்பப்படும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## LID-568 கருந்துளை கண்டுபிடிப்பு

- நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி (JWST) மற்றும் சந்திரா ஊடுகதிர் ஆய்வகம் ஒரு வினோதமான கருந்துளையைக் கண்டுபிடித்துள்ளன.
- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கருந்துளைக்கு LID-568 என பெயரிடப்பட்டுள்ளது.
- இது பெருவெடிப்பிற்கு 1.5 பில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு இருந்த ஒரு குறைந்த நிறை கொண்ட மாபெரும் கருந்துளையாகும்.
- இந்தக் கருந்துளையானது, சுற்றியுள்ள பொருட்களின் திரளில் எடிங்டன் வரம்பை விட 40 மடங்கு அதிகமாக உள்ளிழுக்கிறது.
- ஒரு கருந்துளையானது ஒரு பொருளை உள்ளிழுக்கும் விகிதமானது வானியல் ஆய்வாளர்களால் எடிங்டன் வரம்பு என்று அழைக்கப்படும் வரம்பு மூலம் விவரிக்கப் படுகிறது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## பெருங்கடல் ஒருங்கிணைப்பு நெறிமுறை

- இந்த முக்கியமான நெறிமுறையானது யுனெஸ்கோவின் அரசுகளுக்கிடையேயான கடல்சார் ஆணையத்தினால் கரீபியன் மற்றும் வடக்கு பிரேசில் கண்டத் திட்டுகளின் மீதான முக்கியக் கவனத்துடன் அறிவிக்கப்பட்டது.
- இந்தப் பகுதிகள் பல்லுயிர்ப் பெருக்கம் நிறைந்தவை என்பதோடு ஒவ்வோர் ஆண்டும் சுமார் 610 மில்லியன் டாலர் பங்குடன் அவற்றின் பவளப்பாறைகள் மற்றும் மீன்வளம் ஆனது உள்ளூர்ப் பொருளாதாரங்களுக்கு ஆதரவளிக்கின்றன.
- வடக்குப் பிரேசில் கண்டத் திட்டு ஆனது, ஒரு மாபெரும் கடல் சார் சுற்றுச்சூழல்

அமைப்பாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- இங்கு 500க்கும் மேற்பட்ட மீன் இனங்கள் உள்ளன என்பதோடு மேலும் இந்தப் பகுதி என்பது புயல்களுக்கு எதிரான ஓர் இயற்கை அரணாகச் செயல்படுகிறது.
- இது UNDP/GEF PROCARIBE+ என்ற ஒரு திட்டத்தின் மூலம் உலகளாவிய சுற்றுச்சூழல் மையத்திடமிருந்து முதல் கட்டமாக 15 மில்லியன் டாலர் முதலீட்டைப் பெற்றுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, GEF மையத்தினால் வழங்கப்பட்ட மொத்தம் சுமார் 126.02 மில்லியன் டாலர் மதிப்பிலான கூட்டு நிதியுதவியிலிருந்தும் பயனடைந்துள்ளது.
- இது போன்ற மற்றொரு முன்னெடுப்பு ஆன பவளப்பாறைகளுக்கான உலகளாவிய நிதியம் ஆனது இன்று வரை சுமார் 225 மில்லியன் டாலர் நிதியைத் திரட்டியுள்ளது மற்றும் 2030 ஆம் ஆண்டிற்குள் 3 பில்லியன் டாலர் வரை முதலீடு செய்வதற்கு இலக்கு நிர்ணயித்துள்ளது.




## தாரனாகி மலை - சட்டப்பூர்வ அந்தஸ்து





- நியூசிலாந்து நாட்டு அரசானது, தற்போது அதிகாரப்பூர்வமாக தாரனாகி மவுண்ட் என்று அழைக்கப் படும் தாரனாகி மௌன்க்கா மலைக்கு மனிதனுக்கு வழங்கப்படும் வகையிலான சட்ட உரிமைகளை வழங்கியுள்ளது.
- இந்த அங்கீகாரம் ஆனது தாரனாகி மலையைத் தனிநபர் அந்தஸ்து பெற்ற நாட்டின்

மூன்றாவது இயற்கை அம்சமாக உருவாக்கியுள்ளது.

- முன்னதாக வாங்கனுய் நதி மற்றும் தே உரேவேரா தேசியப் பூங்கா ஆகியவை இதே போன்றச் சட்ட உரிமைகளைப் பெற்றன.
- பழங்குடியின மக்கள், தற்போது தாரனாகி மவுண்ட்கா என்ற அதன் மாவோரி மொழிப் பெயரால் அறியப்படுகின்ற தாரனாகி மலையை ஒரு மூதாதையர் அமைப்பாகக் கருதுகின்றனர்.
- உள்ளூர்ப் பழங்குடியினரான இவி மற்றும் அரசாங்கம் அதை நிர்வாகிப்பதற்காக என இணைந்துச் செயல்படுவதுடன் தாரனாகி மலையானது தனது சொந்த நிர்வகிப்பு மீதான அந்தஸ்தினையும் பெறும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## நிர்மலா சீதாராமனின் 8வது நிதிநிலை அறிக்கை




- நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடர்ந்து எட்டாவது நிதிநிலை அறிக்கையினை தாக்கல் செய்து வரலாறு படைத்துள்ளார்.
- இதன் மூலம், வெவ்வேறு காலக் கட்டங்களில் முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் தாக்கல் செய்த 10 நிதிநிலை அறிக்கை என்ற சாதனையை திருமதி நிர்மலா நெருங்க உள்ளார்.
- ஒரே பிரதமரின் கீழ் தொடர்ந்து எட்டு நிதிநிலை அறிக்கைகளைத் தாக்கல் செய்து, தொடர்ச்சியாக அதிகபட்ச நிதிநிலை அறிக்கைகளைத் தாக்கல் செய்த சாதனையை அவர் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டுள்ளார்.
- ஆனால் தேசாய் 1959 முதல் 1964 ஆம் ஆண்டு வரை நிதியமைச்சராக இருந்த ஒரு காலத்தில் மொத்தம் 6 நிதிநிலை அறிக்கைகளையும், 1967 மற்றும் 1969 ஆகிய இரு ஆண்டுகளுக்கு இடையில் 4 நிதிநிலை அறிக்கைகளையும் தாக்கல் செய்துள்ளார்.

- முன்னாள் நிதியமைச்சர்கள் P. சிதம்பரம் மற்றும் பிரணாப் முகர்ஜி ஆகியோர் முறையே ஒன்பது மற்றும் எட்டு நிதிநிலை அறிக்கைகளை வெவ்வேறு பிரதமர்களின் கீழ் தாக்கல் செய்துள்ளனர்.
- சுதந்திர இந்தியாவின் முதல் மத்திய நிதிநிலை அறிக்கையினை 1947 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதியன்று நாட்டின் முதல் நிதியமைச்சர் R.K.சண்முகம் செட்டி தாக்கல் செய்தார்.
- முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் 1991 முதல் 1995 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக ஐந்து நிதிநிலை அறிக்கைகளைத் தாக்கல் செய்தார்.
- சீதாராமன் 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 01 ஆம் தேதியன்று இரண்டு மணி நேரம் 40 நிமிடங்கள் நீடித்த, மிகவும் நீண்ட நேர ஒரு நிதிநிலை அறிக்கை தாக்கல் உரைக்கான சாதனையைப் படைத்துள்ளார்.
- 1977 ஆம் ஆண்டில் ஹிருபாய் முல்ஜிபாய் படேல் ஆற்றிய ஒரு இடைக்கால நிதிநிலை அறிக்கை தாக்கல் உரையானது வெறும் 800 சொற்களுடன் இதுவரையில் ஆற்றப்பட்ட மிகக் குறுகிய உரையாக கூறப்படுகிறது.
- மார்ச் மாத இறுதிக்குள் பாராளுமன்ற ஒப்புதல் செயல்முறையை அரசாங்கம் நிறைவு செய்ய அனுமதிக்கும் வகையில், நிதிநிலை அறிக்கை தாக்கல் தேதியானது 2017 ஆம் ஆண்டில் பிப்ரவரி 01 ஆம் தேதிக்கு மாற்றப்பட்டது.

## சுனிதா வில்லியம்ஸ் புதிய விண்வெளி நடை சாதனை 2025




- விண்வெளியில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தில் சுமார் 62 மணி நேரம் 6 நிமிடங்கள் நடந்து சென்ற பெண்மணி என்ற புதிய சாதனையை சுனிதா வில்லியம்ஸ் படைத்துள்ளார்.
- பெக்கி விட்சனின் 60 மணி நேரம் 21 நிமிடங்கள் என்ற சாதனையை அவர் முறியடித்து உள்ளார்.

- 2012 ஆம் ஆண்டில், விண்வெளியில் நீடிப்புத் திறன் சோதனையினை நிறைவு செய்த முதல் நபர் என்ற பெருமையை இவர் பெற்றார்.

# விளையாட்டு செய்திகள்

## BCCI வருடாந்திர விருதுகள் 2025

- ஜஸ்பிரித் பும்ராவுக்கு 2023-24 ஆம் ஆண்டின் சிறந்த சர்வதேச ஆடவர் கிரிக்கெட் வீரருக்கான பாலி உம்ரிகர் விருது வழங்கப்பட்டது.
- சச்சின் டெண்டுல்கருக்கு கர்னல் C.K.நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப் பட்டது.
- மகளிர் பிரிவில் 2023-24 ஆம் ஆண்டின் சிறந்த சர்வதேசக் கிரிக்கெட் வீராங்கனை விருது ஸ்மிருதி மந்தனாவுக்கு வழங்கப்பட்டது.
- சுழற்பந்து வீச்சாளர் இரவிச்சந்திரன் அஷ்வினுக்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது.
- ஆடவர் பிரிவில் சிறந்த சர்வதேச அறிமுக வீரருக்கான விருதினை மும்பை வீரர் சர்பராஸ் கான் பெற்றார்.
- மகளிர் மத்தியில், ஆஷா சோபனாவுக்கு சிறந்த சர்வதேச அறிமுக வீராங்கனை என்பதற்கான விருது வழங்கப்பட்டது.
- ஒருநாள் போட்டிகளில் அதிக ரன்கள் எடுத்தவர் என்ற ஒரு பதக்கமும் மந்தனாவுக்கு வழங்கப் பட்டது.
- ஒருநாள் போட்டிகளில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியதற்காக ஆஃப்-ஸ்பின்னர் தீப்தி சர்மா பதக்கத்தினைப் பெற்றார்.
- BCCI உள்நாட்டுப் போட்டிகள் கோப்பையில் சிறந்த ஆட்டத்திற்கான விருது தனுஷ் கோட்டியனுக்கு வழங்கப்பட்டது.
- BCCI உள்நாட்டுப் போட்டிகள் கோப்பையில் சிறந்த ஆட்டத்திற்கான விருது மும்பை கிரிக்கெட் சங்கத்திற்கு வழங்கப்பட்டது.
- இந்தூரைச் சேர்ந்த அக்ஷய் டோட்ரே, இந்த விளையாட்டுத் தொடர் பருவத்திற்கான உள்நாட்டுக் கிரிக்கெட் போட்டிகளில் சிறந்த நடுவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★